தொடர்பு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்கள்' நோபல் பரிசு பெற்று இந்தியாவுக்கு ஒரு பெருமைத் தேடித் தருகின்ற அளவுக்கு, இலக்கியத் துறையிலே நோபல் பரிசு வாங்கியவர் இரபீந்தரநாத் தாகூர். அப்படிப் பட்டவருடைய பிறந்த நாளிலே இந்தப் பேரவையும், முழு மகிழ்ச்சியோடு பங்குகொள்கிறது என்பதையும் இந்தப் பிறந்த நாள் விழாவிலே, அவர்களுடைய பெயரும் புகழும் நீண்ட பெருங்காலம் நின்று நிலவ வேண்டுமென்ற முறையில் வாழ்த்துக் களை கூறிக்கொள்கிறது என்ற முறையில் பங்குகொள்கிறது என்ற முறையில் தங்கள் மூலமாகவே அந்த வாழ்த்தை இந்த அவையின் சார்பாக தெரிவித்துக்கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது பிறந்த நாள் விழாவை என் சார்பிலும் இந்தப் பேரவையின் சார்பிலும் நினைவு கூற விரும்புகிறேன். அவர்கள் தேசிய இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டவர்கள். சிறந்த தத்துவஞானி மட்டும் அல்லாமல் ஒரு சிறந்த தேச பக்தராகத் திகழ்ந்தார். அவருக்கு ஆங்கில அரசால் அளிக்கப் பட்ட 'Knighthood' என்ற பட்டத்தை தம் தாய் நாட்டின் பெருமை கருதி உதறித் தள்ளினார். அவருடைய மிகச் சிறந்த படைப்பான கீதாஞ்சலி என்ற நூலினால் அவருக்கு உலக மாபெரும் பரிசான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் உருவாக்கிய சாந்தி நிகேதன் இந்திய கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அவர் உலக சமாதானத் திற்காகவும், உலக ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார். அதை உலகம் முழுவதும் பரப்புவதில் தம் வாழ்நாளை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் மனித குல மாணிக்கமாக திகழ்ந்தார். அவர் எழுதிய கவிதை இன்று தேசீய கீதமாக பாடப்படுகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் வாடுகிற உள்ளங்களோடு நாமும் பகிர்ந்து கொள்வோம். அதுவே இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற மலர்களாகும் என்பது அவருடைய கொள்கை ஆகும். உங்கள் அனைவரின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு நமது உள மார்ந்த அஞ்சலியை செலுத்துவோமாக.

(ஆ) திரு. காமராசர் நினைவாலயம் பராமரிப்பு குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலை வர் அவர்களே, இதற்கு முன்னால் நடைபெற்ற ஒரு கேள்வியிலே எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் அண்ணா நினைவாலையத்தைப் போலவே பெருந்தலைவர் காமராசர் நினைவாலயம் பரா மரிக்கப்பட வேண்டும்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பேர் பண்ண வேண் டாம். (குறுக்கீடு) சுமுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். அண்ணா நினைவாலயத்தைப் பரா மரிக்கிற அளவிற்கு என்று சொல்கிற அந்த வாசகங்களில் தவறு இல்லை. என்ன தேவை என்று சொல்லுங்கள் கம்பேர் பண்ணாதீர்கள், (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கேள்வி கேட்பதினாலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பராமரிப்பதைப் பொறுத்த வரையில், எந்த வேறுபாடும் எந்தத் தன்மையும் காட்டுவது இல்லை. பராமரிப்பு ஏற்படுகின்ற அளவிற்கு நினைவுச் சின்னங்கள்—காந்திக்கு ஒரு விதமான மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதேமாதிரி எல்லோருக்கும் கட்டுவதில்லை. ஆகவே காமராசர் அவர்களுக்கு ஒருவிதமாக நினைவு ஆலயம் கட்டியிருக்கிறோம். அதே மாதிரி ராஜாஜி அவர்களுக்கும் கட்டியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒருவிதமாக நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போல டெல்லியிலே காந்திக்கும், நேருவிற்கும், இந்திரா காந்திக்கும் விதம் விதமாக கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே ஒரேவிதமான பராமரிப்பு என்று இருப்பதில்லை. ஆகவே அந்தந்த அளவிற்குப் பராமரிப்புகள் சரிவர நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதிலே வேறுபாடு எதுவும் கிடையாது என்பதையும், ஆகவே பேரறிஞர் அண்ணாவை எந்த அளவிற்கு இந்த அரசு விரும்புகிறதோ, அதே அளவிற்குத்தான் நாட்டினுடைய தலைவர்கள், தமிழகத்தின் தலைவர்கள் என்ற முறையில் பெரும் தலைவர் காமராஜ் அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், ராஜாஜி அவர்களும் மதிக்கப்படுகிறார்கள், மற்ற தலைவர்களும் மதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

(இ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்படும் என்கிற கருத்து குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்த அரசிடமிருந்து ஒரு தகவலை அறிய விரும்புகிறேன். சட்டமன்றத்தினுடைய மேலவையைக்கலைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது என்பது உண்மையா? ஆகவே அதற்கான காரணகாரியங்களை அரசு அறிவிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு இரு அவைகள் இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்ற பிரச்சினை பல்வேறு மாநிலங்களில் அவ்வப்போது வருவது உண்டு. இந்த மாநிலத்திலேயும் வந்தது உண்டு. அந்த எண்ணங்கள் அவ்வப் போது வந்து போவதும் உண்டு. ஆகவே மேலவை இருக்க வேண்டுமா, இருக்க வேண்டாமா, என்பது இந்தியா